# சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு ஜுலை மாதம் 24–ஆம் தேதி நாள்.24.07.2023 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகளான மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சி மற்றும் பேரூராட்சி தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் சார்பில் தாங்கள் முழு நேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ளதால் தங்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க வேண்டுமென 13-04-2022 தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.98, நாள்:13.07.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை சிறப்பிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் வகையில், மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க ஆணையிட்டதற்கு,<br>இம்மன்றத்தின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறோம். இவ்வரசாணையை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் ஏற்கலாம். | தீர்மான எண்-982<br>நாள்.24.07.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-2 | இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான கொசுபுழு ஒழித்தல், முதிர்கொசுக்களை கட்டுப்படுத்த தேவைப்படும் அபேட் மருந்து, பைத்திரியம், பேக்டிசைடு மருந்து பொருட்கள் மற்றும் கொசு மருந்து தெளிப்பதற்கு ஸ்பிரேயர் தெளிப்பான்கள் 4 எண்ணிக்கை புதியதாக கொள்முதல் செய்வதற்கும், நடவடிக்கை மேற்கொள்வதற்கும், இதற்காகும் | தீர்மான எண்-983<br>நாள்.24.07.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | உத்தேச செலவின தொகை **ரூ.4.00 லட்சம்** தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **711/2023/எச்.1** | |
| பொருள் எண்-3 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் **20543/2021/தி1–1** நாள்: **03.04.2023**–ன் படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் **2023–24** ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது, சீர்காழி நகராட்சி பேரூந்து நிலையம் நவீன முறையில் மேம்படுத்தப்படும் பணிக்கு, Field & Laboratory & Pavement Design செய்து சான்று தர ஆய்வு செய்து வழங்கிடவும் Sathyabama Institute & Technology,Chennai-க்கு இந்நகராட்சியால் கடிதம் அனுப்பபட்டது. மேற்படி நிறுவனத்திடம் இருந்து **ரூ.1,00,000/–** பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண் : **798/2023/இ1** | தீர்மான எண்-984<br>நாள்.24.07.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இந்திய விலங்குகள் நல வாரியத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் மற்றும் மத்திய மாநில அரசுகளின் ஆணைப்படியும் தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும் மற்றும் வெறிநாய்களை பிடித்து அவைகளுக்கு கருத்தடை செய்து வெறிநாய் தடுப்பூசி ( Anti Rabies Vaccine ) செலுத்தும் பணிகள் மேற்கொள்ளவும் அறுவை சிகிச்சை செய்ய நாய் ஒன்றுக்கு ரூ.**1450**/– வீதம் உத்தேசமாக **240** நாய்களுக்கு **2023–2024** –ஆம் ஆண்டிற்கு மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்தவும் பணியின் முக்கியதுவம் கருதி செலவின தொகை **ரூ.3.50 லட்சம்** நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **3197/2020/எச்.1** | தீர்மான எண்-985<br>நாள்.24.07.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-5 | சீர்காழி நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு கூடுதல் நிதி திட்டம் **2016–2017** சிப்பம்–**1** தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் SSS Contractors அவர்களால் பணி முடிக்கப்பெற்று இறுதி | தீர்மான எண்-986<br>நாள்.24.07.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பட்டியல்தொகை மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு இந்நகராட்சியால் வழங்கப்பட்டு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளரிடம் பணிமுடிவறிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்ததாரர் மேற்படி பணிக்காக **14.11.2016** அன்று செலுத்தப்பட்ட **ரூ.1.50 இலட்சம்** முன்வைப்புதொகை ஆறு ஆண்டுகள் கடந்த நிலையில் உள்ளதால் ,ஒப்பந்ததாரருக்கு வைப்புத்தொகையினை திருப்பி வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 6878/2016/இ1 | |
| பொருள் எண்-**6** | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–**6** ஈசானியத்தெருவில் அமைந்துள்ள கருமாதி மண்டபத்திற்கு பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சிறுமின்விசைப்பம்பு அமைத்து தர அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கிணங்க, பொதுமக்களின் நலன்கருதி அப்பகுதியில் சிறுமின்விசைப்பம்பு அமைக்க ஆகும் செலவீனம் **ரூ.3.00 இலட்சம்** நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : /இ1 | தீர்மான எண்-987<br>நாள்.24.07.2023<br>6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று மன்றம் அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-7 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான மீன் மார்க்கெட் மிகவும் பழுதடைந்துயுள்ளதால் புதிய மீன் மார்க்கெட் அமைக்க மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் **2023–24** ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டதொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது புதிய மீன் மார்க்கெட் அமைக்க அறிவிப்பு வழங்கியதை தொடர்ந்து, புதிய கட்டுமான அமைப்பதற்கான வரைப்படம், Structural Steel, Design மற்றும் Analysis, மேற்கொள்ள திட்ட ஆலோசகர்க்கு மதிப்பீட்டு தொகைக்கு **1.50%** தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : **798/2023/இ1** | தீர்மான எண்-988<br>நாள்.24.07.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-**8** | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் **20543/2021/தி1–1** நாள் : **03.04.2023**–ன் படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் **2023–24** ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மான்ய கோரிக்கையின் போது, சீர்காழி நகராட்சி பேரூந்து நிலையம் நவீன முறையில் மேம்படுத்தப்படும் பணிக்கு அறிவிப்பு வழங்கியதை தொடர்ந்து, புதிய கட்டுமான அமைப்பதற்கான வரைப்படம், Structural Steel, | தீர்மான எண்-989<br>நாள்.24.07.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | Design மற்றும் Analysis, மேற்கொள்ள திட்ட ஆலோசகர்க்கு மதிப்பீட்டு தொகைக்கு **1.50%** தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>** நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்.<br><br>ந.க.எண் : **798/2023/இ1** | |

நாள்: 24-07-2023
இடம்: சீர்காழி

நகர்மன்றத் தலைவர்,
சீர்காழி நகராட்சி.